*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385(Print)
*Volume 13, Issue 3, July – September 2026* ISSN 2394-6393(Online)

# அரசுப் பணியை பெற்றுதரும் ஜாதக அமைப்புகள் – சூரியனின் நிலை

மு. கலைவாணி[#1], முனைவர் G. சுப்ரமணியம்[*2]

*[1]ஆய்வாளர், [2]உதவிப்பேராசிரியர்*

*[1,2]ஜோதிடவியல்துறை, VISTAS பல்லாவரம், சென்னை - 600 117*

**ஆய்வுச் சுருக்கம்:** அரசு உத்தியோகம் என்பது பெரும்பாலோரால் விரும்பப்படும் பணி ஆகும். கால் காசு என்றாலும், கவர்ன்மேன்ட் உத்தியோக காசு என இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. அதை பற்றி ஒரு சிறிய கண்ணோட்டம்.

***திறவுக்கோல் –*** *கர்மதிரிகோணம்; சூரி; ஜாதகர்; அதிபதி; தனம்; நட்சத்திரம்.*

## 1. முன்னுரை

அரசுப் பணியை பெற்றுத் தருவதில் கோள்களின் ஜோதிட ரீதியாக எவ்வாறு பலன்களை ஏற்படுத்துகிறது என்பதை பற்றி கீழ்கண்டவாறு விளக்கப்படுகிறது.

தமிழ் சமுதாயத்தில் அரசு உத்தியோகம் என்பது ஒரு வேலை வாய்ப்பு மட்டுமல்ல; அது ஒரு நிலையான வாழ்க்கையின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. “அரசன் அருகில் இருந்தால் அரிசி குறையாது” என்ற பழமொழி போல, அரசு தொடர்பான பணியில் இருப்பவர்களுக்கு வாழ்க்கையில் பாதுகாப்பும் வசதியும் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் ஆழமாக பதிந்துள்ளது.

நிலைத்த வேலையை தரக் கூடிய ஸ்திர வீடான சிம்மம் வரும் மேலும், சூரியன் அரசன் ஆவார். எனவே, சூரியன் அரசு வேலையை பெறுவதற்கான அமைப்பை தருகிறது. 10-ஆம் இடம் உத்தியோக ஸ்தானமாக பார்க்கப்படுகிறது. அந்த வகையில் 10-ஆம் இடத்தின் அதிபதி 10-இலிருந்து சூரியனின் பார்வை சேர்க்கை ஏற்பட்டால் அரசு வேலை நிச்சயமாக கிடைக்கும் என ஜோதிட நூல்கள் கூறுகின்றன. அரசு வேலைக்கு வகை செய்யும் அமைப்பு தசமஸ்தானம் ஆகும் காரகன் சூரியன். சூரியன் ஒளி கிரகம் ஆத்ம காரகன்

## 2. அரசுப் பணியை பெற்றுத் தருவதில் சூரியன் முக்கியத்துவம்

### 2.1 கோள்களின் காரகத்துவம்

#### 2.1.1 சூரியன்

- தந்தை மற்றும் ஆத்ம காரகன்
- தந்தை வழி உறவினர்கள், மூத்த மகன், திருமணத்திற்கு பிறகு மாமனார்,
- கிரகங்களில் ஒளி கிரகம்
- அரசு மற்றும் பதவி (Government) அரசாங்கம், அரசு அதிகாரிகள், மன்னர், பிரதமர், ஜனாதிபதி, உயர் அலுவலர்கள், அரசியல்வாதிகள், நிர்வாகி.
- அதிகாரம் (Authority)
- தலைமைத்துவம் (Leadership)
- ஆளுமைத் திறன் (Administration) மற்றும் உடல் வலிமை
- கௌரவம் மற்றும் புகழ்
- பிற பெயர்கள் – ரவி, ஞாயிறு, கதிரவன், ஆதவன், பகலவன், வெய்யோன், பரிதி மற்றும் செங்கதிரோன்.
- சூரியன் ஒரு ராசியை கடக்க ஒரு மாதம் ஆகிறது.
- ராசி மண்டலத்தில் சுற்றி வர ஒரு வருடம் ஆகிறது.



**DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133026**

### 2.1.2 பத்தாம் பாவகம்

- பத்தாம் பாவகம் பெருங்கேந்திரம்
- நான்காவது கேந்திரம் எனவும் கூறலாம்.
- தொழில் ஸ்தானம், புகழ், கௌரவம் போன்றவற்றை குறிக்கும்.
- அங்கீகாரம் மற்றும் சாதனையைக் குறிக்கிறது.
- அரசு வேலை, அரசியல் செல்வாக்கு மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய நன்மைகள்.
- ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் போன்ற மதிப்பு மிக்க சேவைகளின் நுழைய விரும்புபவர்களால் விரும்பப்படும் குணங்கள், வலுவான இடம்.
- இது ஒரு கர்ம திருகோணமாகும்.
- ஒருவருக்கு கிடைக்கும் அந்தஸ்து, புகழ், அங்கீகாரம்.
- ஒருவர் எந்தத் உத்தியோகத்தில் இருந்தாலும் அதில் சிறப்புடைய பத்தாம் பாவகம் மிக முக்கிய பங்கு வகிக்கும்.
- ஜீவனம், தொழில் ரீதியாக கிடைக்கும் சமூக அந்தஸ்து, நிர்வாகத்தினர், எதிலும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் இருத்தல்,
- கடமை, அதிகாரம், அரசாங்கத்திடமிருந்து வெகுமதி, கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல் ஆகியவை 10 ஆம் பாவகமே கூறும்.

## 3. அரசுப் பணியை பெறுவதற்கான கிரக அமைப்புகள்

அரசுப்பணியை பெறுவதில் சூரியன் குரு மற்றும் 10ஆம் பாவகம் முக்கிய பங்கும் பெறுகிறது

### 3.1 விதிகள்

- சூரியன் / சனி தொடர்பு
- சூரியன் / செவ்வாய் தொடர்பு
- சூரியன் / குரு தொடர்பு
- சூரியன் / 10-ஆம் அதிபதியுடன் தொடர்பு
- சூரியன் / 6-ஆம் அதிபதியுடன் தொடர்பு
- சூரியன் / 2-ஆம் அதிபதியுடன் தொடர்பு

### 3.1.1 உதாரண சாதகம் – 1

பெண் ஜாதகம் –
பிறந்த தேதி –01.10.1968 செவ்வாய்
நேரம் – 05.15 முற்பகல்
பிறந்த இடம் – கிருஷ்ணகிரி
ஜெ/லக்னம் - கன்னி
ஜெ/ராசி - மகரம்
ஜெ/நட்சத்திரம் – உத்திராடம்
லக்ன புள்ளி – உத்திரம் - 2

அட்டவணை 1. ஜாதகரின் இராசி மற்றும் நவாம்ச சக்கரங்களில் கிரக நிலைகள் - உதாரண சாதகம் – 1

| | | | |
|---|---|---|---|
| சனி ராகு | | | |
| சந் | இராசி | | செ குரு |
| | | புத சுக் | ல சூரி கே |
| சந் சனி | | சூரி கே | |
| ல சுக் | அம்சம் | | செ |
| புத குரு மா | ரா | | |

ஜாதகருக்கு அன்றைய வயது

| | | |
|---|---|---|
| As on | - | 2008 – 02 – 01 |
| DOB | - | 1968 – 10 – 01 |
| | | 39 – 04 - 00 |

### 3.1.2 தசா புக்தி

குரு தசை – 13.11.2004 – 13.11.2020 – 16 வருடங்கள்

குரு தசை – சனி புக்தி 01.01.2007 – 15.07.2009 – 2 வருடங்கள் 6 மாதங்கள் 14 நாட்கள்


DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133026

**3.1.3 விதிகளின் படி**

- சூரியன் / சனி தொடர்பு – முதல் விதி பொருந்துகிறது.
- சூரியன் / செவ்வாய் தொடர்பு – சூரியன் வீட்டில் செவ்வாய் உள்ளதால் இரண்டாம் விதி பொருந்தும்.
- சூரியன் / 10-ஆம் அதிபதியுடன் தொடர்பு – புதன் வீட்டில் சூரியன் உள்ளதால் மூன்றாம் விதி பொருந்தும்.
- சூரியன் / 6-ஆம் அதிபதியுடன் தொடர்பு – 6-ஆம் அதிபதியான சனி - சூரியன் பார்வை உள்ளதால் நான்காம் விதி பொருந்தும்.

**3.1.4 உதாரண ஜாதகம் - 2**

பெண் ஜாதகம் –
பிறந்த தேதி –07.09.1990 வெள்ளி
நேரம் – 03.09 பிற்பகல்
பிறந்த இடம் – திருச்சி
ஜெ/லக்னம் - தனுசு
ஜெ/ராசி - மீனம்
ஜெ/நட்சத்திரம் – ரேவதி
லக்ன புள்ளி – பூராடம் - 2

அட்டவணை 2. ஜாதகரின் இராசி மற்றும் நவாம்ச சக்கரங்களில் கிரக நிலைகள் - உதாரண சாதகம் – 2

| | | | |
|---|---|---|---|
| சந் | | செ | |
| | இராசி | | குரு கே |
| ரா | | | சூரி புத சுக் |
| ல சனி | | | |
| | செ | | குரு |
| சந் | அம்சம் | | சுக் கே |
| ரா | | | சூரி புத |
| ல சனி | | | |

ஜாதகருக்கு அன்றைய வயது

| | | |
|---|---|---|
| As on | - | 2013 – 12 – 02 |
| DOB | - | 1990 – 09 – 07 |
| | | 23 – 02 - 25 |

**3.1.5 தசா புக்தி**

சுக்கிர தசை – 03.07.2005 – 03.07.2025 – 20 வருடங்கள். சுக்கிர தசை – ராகு புக்தி 01.09.2012 – 02.09.2015 – 2 வருடங்கள் 11 மாதங்கள் 29 நாட்கள்

**3.1.6 விதிகளின் படி**

- சூரியன் / சனி இருவரும் 10 – ஆம் பாவாதிபதியின் நட்சத்திர சாரம் – முதல் விதி பொருந்துகிறது
- சூரியன் / 6-ஆம் அதிபதியுடன் தொடர்பு – ஐந்தாம் விதி பொருந்தும்.
- சூரியன் / 10-ஆம் அதிபதியுடன் தொடர்பு – இரண்டாம் விதி பொருந்தும்.

## 4. முடிவுரை

ஒருவர் ஜாதகத்தில் சூரியன் பலமாக இருந்தால் அரசுப்பணி. அதிகாரமிக்க பதவி வாய்ப்பு கிடைக்கும். தலைமைப் பொறுப்புகள், நல்ல பெயர், புகழ், சமூக மரியாதை உயரும். தன்மைமிக்க மற்றும் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். ஆகையால் சூரியன் செவ்வாய் சனி மற்றும் 2-ஆம் பாவம், 6-ஆம் பாவம் மற்றும் 10-ஆம் பாவக தொடர்பு பெறும் போது ஜாதகர் அரசு வேலையில் அமர்வார்.

**பார்வை நூல்கள்**

[1] குடும்ப ஜோதிடம், பொத்தேரி ஸ்ரீ ராமய்யங்கார் மற்றும் கீழத்தூர் ஸ்ரீ ஸ்ரீ நிவாஸ சாரியார், திருவள்ளுவர் கௌசிகன் ஸ்வாமி ஜோதிடர் - ஸ்ரீ ந்ருஸிம்ஹப்பிரியர், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை - 600 017, 10/03/1978.

[2] காரகத்துவம், டாக்டர் நெல்லை க.வசந்தன், Astro NKV Academy Human Life Research Centre, 20/2, 8A,Brindavan Street Extn, West Mambalam, Chennai – 600 033, அக்கடாபர் 2024


DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133026

[3] ஜோதிட ஆராய்ச்சித் திரட்டு (மூன்றாம் பகுதி), மு.மாதேஸ்வரன், விஜயா பதிப்பகம் 20, ராஜா வீதி, கோயமுத்தூர் - 641 001, 15-ம் பதிப்பு, 2022.

[4] பாவகப்பலன், கீழவளவு K.சுப்ரமணியம், ஸ்ரீ ஆரோ மீரா பிரசுரம் தம்மம்பட்டி, கசலம் மாவட்டம், முதல் பதிப்பு, 01/07/2011.

[5] பத்தாம் பாவமும் உத்தியோக யோகமும், நந்தா துரைசாமி, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம், ஸ்ரீ ஆரோ மீரா பிரசுரம் நெ.1, ஏரப்ப கவுண்டர் சந்து தம்மம்பட்டி (அஞ்சல்), சேலம் மாவட்டம், டிசம்பர் 2020.

[6] மகாகவி காளிதாசரின் உத்தர காலாமிர்தம் ஜோதிட இந்து சாஸ்திர நூல், எட்டயபுரம் க.கோபிகிருஷ்ணன், குமரன் பதிப்பகம் 3, முத்து கிருஷ்ணன் தெரு பாண்டி பஜார், சென்னை-17, நவம்பர் 2000.

[7] திசா புக்தி பலன்கள், ஷண்முகானந்தா, பிரேமா பிரசுரம் 59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024, 13வது பதிப்பு, 2006.



**DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133026**